# ஜல்லிக்கட்டு வீரர்களுக்கு அரசுப் பணி: முதல்வர் அறிவிப்பு!

முதல்பக்கத் தொடர்ச்சி

இதனை சொல்லுகின்ற நேரத்தில், இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக் கக்கூடிய ஜல்லிக்கட்டைப் பார்க்க முதல மைச்சராக வந்திருக்கக்கூடிய நான் ஏதாவது அறிவிப்புகளை வெளியிட்டுச் சென்றால்தான் உங்களுக்கும் திருப்தி, எனக்கும் திருப்தியாக இருக்கும்.

அதனால், இரண்டு அறிவிப்புகளை நான் மகிழ்ச்சியோடு உங்களிடத்தில் அறிவிக்க விரும்புகிறேன்.

**முதல் அறிவிப்பு**

**பாரம்பரியமிக்க ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் பங்குபெற்று, அதிக காளைகளை அடக்கி, சிறந்து விளங்கக்கூடிய வீரர்களுக்கு, முன்னுரிமை அடிப்படையில், கால்நடை பராமரிப்பு துறையில், உரிய அரசு பணி இடங்களுக்கு, பணி அமர்த்திட வழிவகை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.**

**இரண்டாவது அறிவிப்பு**

**உலகப் புகழ் பெற்ற தமிழ்நாட்டின் ஜல்லிக்கட்டு காளைகளுக்கான அலங்காநல்லூர் பகுதியில், சிறந்த உயர்தர சிகிச்சை மற்றும் பயிற்சி மையம் 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

> **முதல் அறிவிப்பு!**
>
> **பாரம்பரியமிக்க ஜல்லிக்கட்டுப் போட்டிகளில் பங்குபெற்று, அதிக காளைகளை அடக்கி, சிறந்து விளங்கக்கூடிய வீரர்களுக்கு, முன்னுரிமை அடிப்படையில், கால்நடை பராமரிப்பு துறையில், உரிய அரசு பணி இடங்களுக்கு, பணி அமர்த்திட வழிவகை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.**
>
> **இரண்டாவது அறிவிப்பு!**
>
> **உலகப் புகழ் பெற்ற தமிழ்நாட்டின் ஜல்லிக்கட்டு காளைகளுக்கான அலங்காநல்லூர் பகுதியில், சிறந்த உயர்தர சிகிச்சை மற்றும் பயிற்சி மையம் 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**
>
> **இந்த இரண்டு அறிவிப்பும் உங்களுக்கு மகிழ்ச்சி தானே! அந்த மகிழ்ச்சியோடு தமிழர்கள் எல்லோரும் வெல்வோம் ஒன்றாக என கூறினார்.**

**இந்த இரண்டு அறிவிப்பும் உங்களுக்கு மகிழ்ச்சி தானே! அந்த மகிழ்ச்சியோடு தமிழர்கள் எல்லோரும் வெல்வோம் ஒன்றாக!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்

அதனைத் தெடர்ந்து, அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழா குழுவினருக்கு வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் அவர்கள் சிறப்பு செய்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர்கள். தங்க தமிழ்செல்வன், சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ. தளபதி, ஆ.வெங்கடேசன், பூமிநாதன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே. ஜே.பிரவீன்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – நாளை

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் **"தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்" நாளை** (20.01.2026 - செவ்வாய்க்கிழமை) மாலை 6.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் : 2026 சட்டப்பேரவைத் தேர்தல்**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# மொழிப்போர்த் தளபதி எல்.கணேசன் படத்திறப்பு நிகழ்ச்சி!

## கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைக்கிறார்!

*தஞ்சாவூர், ஜன.19 -*

தஞ்சை மண்ணில் கழகம் வளர்த்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தளகர்த்தர்களில் ஒருவர், மறைந்த மொழிப்போர் தளபதி எல்.கணேசன் அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி இன்று (19.01.2026 - திங்கள் கிழமை) காலை 10.00 மணிக்கு தஞ்சையில் நடைபெற உள்ளது.

தஞ்சாவூர் புது பேருந்து நிலையம் அருகில் உள்ள பி.எல்.ஏ திருமண மண்டபத்தில் நடைபெற உள்ள படத்திறப்பு நிகழ்ச்சியில் தஞ்சை மத்திய மாவட்டக்



கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமை வகிக்கிறார்.

அமைச்சர்கள் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, முனைவர் கோவி.செழியன், எஸ்.ரகுபதி, முனைவர் டி.ஆர். பி.ராஜா, சிவ.வீ. மெய்யநாதன், டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு, எல்.கணேசன் அவர்களின் திருவுருவ படத்தினை திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்த உள்ளார்.

இந்நிகழ்வில் மாவட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், முன்னாளர் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து கட்சி நிர்வாகிகள், கலந்து கொள்ள உள்ளனர்.

மேற்கண்ட படத்திறப்பு நிகழ்ச்சியில் கழக தோழர்களும், கழக முன்னோடிகள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் தவறாது கலந்து கொள்ள எல். கணேசன் அவர்களின் குடும்பத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# திருவள்ளுவர் தின விருதுகள்: முதல்வர் வழங்கினார்!

முதல்பக்கத் தொடர்ச்சி

மாநில இலக்கிய விருதுகள் பெற்ற எழுத்தாளர்களுக்கு அவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் அல்லது விரும்பும் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு மூலமாக கனவு இல்லம் வழங்கும் திட்டம், தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை போன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து, சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

**திருவள்ளுவர் திருநாள் விருதுகள்**

அந்த வகையில், தமிழறிஞர்களை சிறப்பிக்கும் வகையில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் 2026ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது முதுமுனைவர் மு.பெ.சத்தியவேல் முருகனார் அவர்களுக்கும், 2025ஆம் ஆண்டுக்கான தந்தை பெரியார் விருது வழக்கறிஞர் திருமதி அ.அருள்மொழி அவர்களுக்கும், அண்ணல் அம்பேத்கர் விருது திரு.சிந்தனைச் செல்வன் அவர்களுக்கும், பேரறிஞர் அண்ணா விருது மாண்புமிகு நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களுக்கும், பெருந்தலைவர் காமராசர் விருது திரு.எஸ்.எம். இதயத்துல்லா அவர்களுக்கும், மகாகவி பாரதியார் விருது கவிஞர் நெல்லை திரு. ஜெயந்தா அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது கவிஞர் திரு.யுகபாரதி அவர்களுக்கும், தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது முன்னாள் தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு அவர்களுக்கும், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் விருது முனைவர் சு.செல்லப்பா அவர்களுக்கும், முத்தமிழறிஞர் கலைஞர் விருது திரு. விடுதலை விரும்பி அவர்களுக்கும், என மொத்தம் 10 விருதாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் வழங்கி, சிறப்பித்தார்.

விருது பெறும் விருதாளர்களுக்கு விருதுத் தொகையாக ஐந்து இலட்சம் ரூபாய், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை ஆகியவற்றை வழங்கியும் பொன்னாடை அணிவித்தும் சிறப்பு செய்யப்பட்டது.

**2025ஆம் ஆண்டுக்கான இலக்கிய மாமணி விருது**

பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புகளைக் கொண்டு, சீரிளமையோடு இலங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தொண்டாற்றிடும் தமிழ்த்தாயின் அறிஞர் பெருமக்களுக்கு மரபுத்தமிழ், ஆய்வுத்தமிழ், படைப்புத் தமிழ் ஆகிய மூன்று வகைப் பாட்டில் ஆண்டுதோறும் உயரிய விருதான இலக்கிய மாமணி விருது வழங்கப் பட்டு வருகிறது.

அந்த வகையில், 2025ஆம் ஆண்டிற்கான இலக்கிய மாமணி விருதுகளில் மரபுத் தமிழ் வகைப்பாட்டில் இலக்கியச் சுடர் திரு.த.இராமலிங்கம் அவர்களுக்கும், ஆய்வுத் தமிழ் வகைப்பாட்டில் எழுத்தாளர் திரு.சி. மகேந்திரன் அவர்களுக்கும், படைப்புத்தமிழ் வகைப்பாட்டில் திரு. இரா. நரேந்திரகுமார் அவர்களுக்கும், என மூன்று விருதாளர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் இலக்கிய மாமணி விருதுகளை வழங்கி சிறப்பித்தார்.

இலக்கிய மாமணி விருது பெற்ற விருதாளர்களுக்கு விருதுத் தொகையாக ஐந்து இலட்சம் ரூபாய், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை ஆகியவற்றை வழங்கி, பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்யப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், பி.கே. சேகர்பாபு, சிவ.வீ. மெய்யநாதன், மருத்துவர் மா. மதிவேந்தன், மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் மரு. நா.எழிலன், எஸ்.எஸ்.பாலாஜி, பாபு, தலைமைச் செயலாளர்நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சட்டப்பேரவைத் தேர்தல் - 2026 - கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையிலான

# 'தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு' ஓசூர் வருகை!

## மாவட்ட செயலாளர்கள் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. - தே.மதியழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!

*கிருஷ்ணகிரி, ஜன. 19 -*

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. - கிழக்கு மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பத்தாண்டு காலம் இருண்டு கிடந்த தமிழ் நாட்டை மீட்டெடுத்து, எல்லோர்க்கும் எல்லாம் என ஒளிமயமான பாதையில் பயணிக்கச் செய்திருக்கும் திராவிட மாடல் அரசு கடந்த தேர்தலில் அளித்த 505 வாக்குறுதிகளில் 404 க்கும் அதிகமானவற்றை நிறைவேற்றி, சொன்னதைச் செய்த அரசாக மட்டும் இல்லாமல் சொல்லாததையும் செய்த அரசாக மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்துள்ளது.

இந்த சாதனைகளின் தொடர்ச்சியாக அடுத்த ஐந்தாண்டுகளுக்கான வளர்ச்சியைத் திட்டமிட 'திராவிட மாடல் 2.0' தயாராகி வருகிறது. இந்த புதிய பயணத்திற்கான தேர்தல் அறிக்கை என்பது வெறும் காகிதமல்ல, அது மக்களின் குரலாக இருக்க வேண்டும் என்ற மாண்புமிகு கழக தலைவர் அவர்களின் விருப்பத்தின்படி ஒவ்வொரு தமிழ்நாட்டு குடிமகனின் தேவையையும் பிரதிபலிக்கும் வகையில், மக்கள் பங்கேற்புடன்கூடிய ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தல் அறிக்கையை உருவாக்க கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு தயாராகி வருகிறது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைபடியும்,





கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி 2026 சட்டப் பேரவை தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி., அவர்கள் தலைமையில் டி.கே.எஸ்.இளங்கோவன், முனைவர் கோவி. செழியன், முனைவர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், முனைவர் டி.ஆர். பி.ராஜா, எம்.எம். அப்துல்லா, பேரா. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், மருத்துவர் எழிலன் நாகநாதன், கார்த்திகேய சிவசேனாபதி, திருமதி. ஆ.தமிழரசி ரவிக்குமார், ஜி.சந்தானம் ஐ.ஏ.எஸ். சுரேஷ் சம்பந்தம் ஆகிய 12 பேர் அடங்கிய குழு கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம், ஓசூரில் மாநகராட்சியில் உள்ள ஆனந்த் கிராண்ட் பேலஸ் திருமண மண்டபத்தில் வரும் 19 ஆம் தேதி காலை 9.00 மணிக்கு பொதுமக்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்கவிருக்கிறார்கள்.

அதுசமயம் கிருஷ்ணகிரி கிழக்கு மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள் முனைப்புடன் செயல்பட்டு வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், தொழிற்சங்கங்கள், தொழில் முனைவோர், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், தன்னார்வலர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ., தே.மதியழகன் எம்.எல்.ஏ. ஆகியோர் தமது அறிக்கையில் கூறியுள்ளனர்.

## கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்

# பா.மு.முபாரக் சகோதரர் பா.மு. இக்பால் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன.19 -

கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக்கின்மூத்த சகோதரர் பா.மு.இக்பால் (74) அவர்கள் நேற்று முன்தினம் (17.01.2026) காலை இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இவருக்கு திருமணமான 3 மகள்கள் உள்ளனர்.

அன்னாரது உடல் நல்லடக்கம் 17.01.2026 அன்று இரவு 7 மணியளவில் குன்னூரில் நடைபெற்றது.

இம்மறைவு செய்தி அறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை, சகோதரரை இழந்து வாடும் பா.மு. முபாரக்கிற்கும், அன்னாரது குடும்பத்தாருக்கும் தெரிவித்துள்ளார்.

## கே.கே.செல்லப்பாண்டியன் தலைமை! தென்னலூர் எம்.பழனியப்பன் வரவேற்புரை!

# புதுக்கோட்டை அன்னவாசலில் துணை முதலமைச்சர் பிறந்த நாள் விழா - பொதுக்கூட்டம்!

## திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரையாற்றினார்!

*புதுக்கோட்டை ஜன 19 -*

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் மேற்கு ஒன்றியம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா மாபெரும் பொதுக்கூட்டம் 10.01.2026 சனிக்கிழமை, அண்ணா திடல் மலைக்குடிப்பட்டியில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன்

தலைமையில் நடைபெற்றது. அன்னவாசல் மேற்கு ஒன்றிய செயலாளர் தென்னலூர் எம்.பழனியப்பன், அன்னவாசல் தெற்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ்.சந்திரன் ஆகியோர் வரவேற்புரையாற்றினார்கள். கே.ஆர்.என். போஸ், மு.பி.ம. சத்தியசீலன், அ.இளங்குமரன், கே.பி.அய்யப்பன், எம். கோவிந்தராஜ் , எம்.செந்தில்குமார்,

டி.செல்வம், எம். எஸ்.ஏ.முகம்மது ரிஷா, இ.செந்தில்ராஜா, பி.மாரிமுத்து, கே.கே.எம். கார்த்தி, ஆர்.விஜயக்குமார், டி.கணேசன், கை. பழனிச்சாமி, பி. மாரிமுத்து மதியநல்லூர் ராமச்சந்திரன், டி. சண்முகம், கட்டகுடி பி.சுப்பிரமணியன், சென்னை சிவா, சாங்கிராப்பட்டி

ரவி, டி.சண்முகம், கே.ஆர்.ஜி.வேலுச்சாமி, வி.சி.பரஞ்சோதி, டி.சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு பாடநூல் கழகதலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்வுகளில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், த.சந்திரசேகரன், விராலிமலை தொகுதி பொறுப்பாளர், தஞ்சை துணை மேயர் அஞ்சுகம் பூபதி, வை.விஜயக்குமார், சொ. தமிழினியன், அரு.வீரமணி, தவ.பாஞ்சாலன், கலைஞர் கருணாநிதி, விளாப்பட்டி சிவா, அன்சாரி பாஷித், புல்வயல் சுந்தர்ராஜன், மகேஷ்குமார், ஏ.பி.ஆர்.ராஜாங்கம், எஸ்.சிவக்குமார்,

சிவசுப்பிரமணியன். சுரேஷ்குமார், சு.அழகர், ஐஸ் கணேசன், ஒன்றிய கழக செயலாளர்கள்

சி.சண்முகம், தவ.பாஞ்சாலன், டாக்டர் கே.என். அமானுல்லா, கிட்டு, தங்கவேலு, சுப்பு, திருநாவுக்கரசு, தெயராமன், வெள்ளைச்சாமி, கலைவாணன், செல்லக்கண்ணு, நாசர், ஆனந்த் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்டக் கிளைக் கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முடிவில் அன்னவாசல் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.ஆர்.எஸ். மாரிமுத்து நன்றி கூறினார்.



மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூரில் குதிரை, மாடு எல்கை பந்தயத்தை மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன் கொடி அசைத்து தொடங்கி வைத்தார். உடன் தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், அமிர்த.விஜயகுமார், தரங்கம்பாடி பேரூர் செயலாளர் எஸ்.கே. முத்துராஜா, தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணாசங்கரிகுமரவேல், மாவட்ட இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் எழில்நம்பி, ஒன்றிய குழு முன்னாள் துணைத் தலைவர் பி.பாஸ்கர், மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் இரா.செந்தில். திருக்கடையூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஜெயமாலினிசிவராஜ் மற்றும் பலர் உள்ளனர்.



திருவாரூர் ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் ஆதரவற்ற பெண்களுக்கு தையல் எந்திரங்கள், சமையல் பாத்திரங்கள் வழங்கப்பட்டது. மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையேற்ற இந்த நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் புலிவலம் .ஏ.தேவா, சேகர் கலியபெருமாள், மாவட்ட அமைப்பாளர் எம்.என்.ராஜா, ஒன்றிய அமைப்பாளர் ஹரிஹரசுதன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் பங்கேற்றனர்.